இனிமையான குழந்தைகளே! எந்த தாய் தந்தையிடமிருந்து உங்களுக்கு எல்லையில்லாத ஆஸ்தி கிடைக்கிறதோ, அந்த தாய் தந்தையரின் கையை ஒருபொழுதும் விட்டு விடாதீர்கள் படிப்பை விட்டு விட்டீர்கள் என்றால் அநாதை ஆகி விடுவீர்கள்.

கேள்வி: பாக்கியசாலி குழந்தைகளின் புருஷார்த்தம் என்னவாக இருக்கும்? அவர்களின் அடையாளம் கூறுங்கள்?

பதில்: பாக்கியசாலி குழந்தைகள் ஆத்மா உணர்வில் இருப்பதற்கான புருஷார்த்தம் செய்கிறார் கள். என்ன கேட்கிறார்களோ அதை மற்றவர்களுக்குத் தானமாக கொடுக்கிறார்கள். அவர்களால் சங்கொலி எழுப்பாமல் இருக்க முடியாது. தானம் செய்தால் தான் தாரணை கூட ஆகும். பாக்கியசாலி குழந்தைகள் இரவு பகலாக சேவையில் முதல்தரமான உழைப்பு செய்வார்கள். ஒருபொழுதும் தர்மராஜரை அலட்சியப்படுத்த மாட்டார்கள். வெறுமனே நல்ல நல்ல உணவை சாப்பிட்டார்கள், நல்ல நல்ல உடையை அணிந்து கொண்டார்கள், சேவை செய்யவில்லை, ஸ்ரீமத்படி நடக்கவில்லை என்றால் மாயை மிகவும் மோசமான கதியை உண்டு பண்ணி விடும்.

பாடல்: போலாநாத்தை விட தனிப்பட்டவர் வேறு யாருமில்லை.....

ஓம்சாந்தி கெட்டுப்போனதை சீர்திருத்துபவர் ஒரே ஒருவர் மட்டுமே. இதை உலகம் அறியாது. இங்கு அமர்ந்திருக்கும் குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். உங்களிடையேயும் நம்பர் பிரகாரம் புருஷார்த்தத்தின்படி அறிந்துள்ளீர்கள். கெடுப்பது மாயை ஆகும். அசுர வழிப்படி நடப்பவர்களே கெட்டு விடுகிறார்கள். போலாநாத் என்று சிவனுக்குத்தான் கூறப்படுகிறது என்பதை இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். சங்கரனை போலாநாத் என்று கூறுவதில்லை. யார் கெட்டுப்போனதை சீர்திருத்துகிறாரோ அவர் தான் போலாநாத் என்று அழைக்கப்படுகிறார். மிகவும் கள்ளம் கபடமற்றவர் (போலா) ஆவார். ஏழைகளுக்கு அளவற்ற கஜானா அளிப்பவர் ஆவார். குழந்தைகளுக்கு முதல், இடை, கடை பற்றிய ஞானம் அளிக்கிறார். அதற்கான இந்தப் படம் அமைக்கப்பட்டுள்ளது. வேறு யாருமே இது தலைகீழான விருட்சம் என்று இவ்வாறு விளக்குவதில்லை. இந்த விருட்சம் மற்றும் நாடகம் பற்றிய ஞானம் வேறு எந்த வேத சாஸ்திரத்திலும் கூட இல்லை என்று பகவான் கூறுகிறார். இது பற்றிய ஞானம் பகவான் தான் அளித்துள்ளார். அதனுடைய சாஸ்திரம் தான் சர்வ சாஸ்திர சிரோன்மணி என்று அழைக்கப்படும் பகவத் கீதை ஆகும். பரமபிதா பரமாத்மா எவ்வளவு இனிமையான பாபா ஆவார். ஆனால் அவரது நினைவை மாயை மறக்கச் செய்து விடுகிறது. நீங்கள் பாபாவை நினைவு செய்வதற்கான முயற்சி செய்கிறீர்கள். ஆனால் மாயை மிகவும் புத்திசாலியாக உள்ளது. அது உங்களை நினைவு செய்ய விடாது. இப்பொழுது பாபா உங்களை இந்த அழுக் கூடிய உலகத்திலிருந்து தொலை தூரத்திற்கு அழைத்துச் செல்கிறார். அங்கு 21 பிறவிகளுக்கு உங்களுக்கு அழ வேண்டிய அவசியமே இருக்காது. நீங்கள் 63 பிறகளாக அழுதீர்கள். 84 பிறவிகள் என்று கூற மாட்டோம். இதுவும் குழந்தைகளாகிய நீங்கள் தான் அறிந்துள்ளீர்கள். போலாநாத் அமர்ந்து விளக்குகிறார். எப்பொழுதிலிருந்து இராவணன் கெடுக்க ஆரம்பிக் கிறானோ அப்பொழுது முதல் நீங்கள் அழத் துவங்கிவிட்டீர்கள். மனிதர்களுக்கு விளக்கு

வதற்காக இந்த பெரிய விருட்சம் மற்றும் சக்கரம் அமைக்கப்பட்டு இருக்கிறது. ஏனெனில் பெரிய படங்கள் மூலம் நல்ல முறையில் விளக்க முடியும். ஒரு சில குழந்தைகள் தங்களது கர்மங்களுக்கு ஏற்ப அவ்வளவு தாரணை செய்ய முடியாமல் கூட இருக்கிறார்கள் தான். எல்லோருமே ராஜா, ராணி ஆக மாட்டார்கள். நல்ல கர்மம் செய்திருந்தார்கள் என்றால் அதன் பலன் வருங்காலத்தில் அவசியம் கிடைக்கும். கர்மங்களின் விளைவு ஆகும் அல்லவா? தந்தை கூறுகிறார், நான் கர்மம், அகர்மம் மற்றும் விகர்மத்தின் கதியை (நிலைகளை) அறிந்துள்ளேன் மற்றும் விளக்குகிறேன். ஆசிரியரோ அனைவருக்கும் ஒன்று போலவே தான் படிப்பிக்கிறார். பின் ஒரு சிலர் நல்ல நம்பரில் பாஸ் ஆகிறார்கள். ஒரு சிலர் பாஸ் ஆவதில்லை. கூறுவார்கள், என்ன செய்வது! கர்மங்களின் கணக்கு வழக்கே அவ்வாறு தான் உள்ளது, நாம் படிப்பது இல்லை என்று. இங்கும் அவ்வாறு தான் உள்ளது. ஒரு சிலரோ நன்றாகப் படிக்கிறார்கள் ஒரு சிலரோ படிப்பை அதாவது கல்லூரியையே விட்டு விடுகிறார்கள். கல்லூரியை விட்டு விட்டார்கள் என்றால் தந்தை, ஆசிரியர் மற்றும் சத்குருவையும் விட்டு விட்டார்கள் என்பதாகும். விட்டு விடுவதால் அநாதை ஆகிவிடுகிறார்கள். யாருக்கு தாய் தந்தை இல்லையோ அவர்கள் தான் அநாதை என்று கூறப்படு கிறார்கள். எனவே எந்த தாய் தந்தையிடமிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தி கிடைக்கிறதோ அவர்களை விட்டு விட்டார்கள் என்றால் அநாதை ஆகி விடுகிறார்கள். இங்கு கூட சில பேர் இங்கிருந்து விடு பட்டு பழைய உலகிற்குச் செல்வோம் என்று நினைக் கிறார்கள். ஆனால் அங்கு ஞானமோ எடுக்க முடியாது. அங்கோ நாடகம், திரைப்படம், உலாவுவது, சுற்றுவது, நல்ல ஆடைகள் அணிவது ஆகியவை கிடைக்கும். யாருடைய அதிர்ஷ்டத்தில் இல்லையோ அவர்களுக்கு அப்பேர்ப்பட்ட சிந்தனை எழுகிறது. பழைய உலகமோ இப்பொழுது விரைவில் முடியப்போகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். எதுவுமே கூட வரப்போவ தில்லை. நீங்கள் இந்த தேக அபிமானத்தைக் கூட விட்டு விட வேண்டும். தேக அபிமானத்தின் காரணமாகவே மற்ற எல்லா விகாரங்களும் வருகின்றன. ஆத்ம அபிமானி ஆவதற்கு மிகுந்த உழைப்பு தேவைப்படுகிறது. உங்களை ஆத்மா என்று உணருங்கள் என்று தந்தை கூறுகிறார். நான் கூட தற்காலிகமாக இந்த சரீரத்தில் வந்துள்ளேன். நாமே தான் தேவதைகளாக இருந்தோம். இப்பொழுது பின் நாமே தான் சூத்திரர் ஆகி உள்ளோம். ஸ்ரீமத்படி நடந்து நாம் உலகத்தை சொர்க்கமாக ஆக்குகிறோம். குழந்தைகளாகிய நீங்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள். சிவபாபா வரும் பொழுது பாரத மாதாக்களாகிய உங்களைத் தான் சக்தி சேனை ஆக்குகிறார். எனவே தான் உங்களது பெயர் சிவசக்திசேனை என்று உள்ளது. நீங்கள் சிவனிடமிருந்து சக்தி பெற்று உங்களது சுய இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டு இருக்கிறீர்கள். உயர்ந்ததிலும் உயர்ந்தவர் சிவபாபா ஆவார். உலகமோ முற்றிலுமே காரிருளில் உள்ளது. உங்களிடையேயும் கூட நம்பர் பிரகாரம் புருஷார்த்தத்தின் படி வெளிச்சத்தில் உள்ளீர்கள். ஒரு சிலருடைய ஜோதி ஏற்றப்படுவதே இல்லை. அதுவும் நாடகத்தில் அடங்கி உள்ளது. ஒரு சிலரது ஜோதி ஏற்றப்பட்ட பின்னரும் கூட பின் மாயை அணைத்து விடுகிறது. போகப்போக மாயையின் புயலின் பாதிப்பால் முன்பிருந்தது போலவே ஆகி விடுகிறார்கள். இந்த உலகத்தில் ஒரு சிலரோ மிகவும் செல்வந்தர்களாக உள்ளார்கள். ஒரு சிலர் 10 ரூபாய் கூட சம்பாதிப்பதில்லை. அநேக மனிதர்களுக்கு உணவு கிடைப்பது கூட அரிதாக உள்ளது. உணவிற்காக எவ்வளவு கூப்பாடு போடுகிறார்கள். அமெரிக்கா ஆகிய தேசங்கள் பிறகு

இரக்கம் கொள்கின்றன. உணவு தானியங்கள் ஆகியவற்றை கொடுத்து கொண்டிருக் கின்றனர். இது மனிதர்களுக்கோ தெரியாது. இதுவும் நாடகத்தில் இரகசியமாக உள்ளது. நீங்கள் மிகவும் துக்கம் அடையும் பொழுது மீண்டும் தந்தை வருகிறார். அவர்களுக்கு தூண்டுதல் கிடைப்பதில்லை என்றால் உங்களுக்கு உதவி செய்ய மாட்டார்கள். இப்பொழுது உங்களது முழு ராஜதானி ஸ்தாபனை ஆகவில்லை.

இந்தப் படங்கள் அனைவருக்கும் விளக்குவதற்காக உள்ளன. இவற்றிற்கு மிகுந்த மகத்துவம் உள்ளது எப்படி வரைபடங்கள் உள்ளன. வரைபடமின்றி குறிப்பிட்ட இந்த நகரம் எங்கே உள்ளது என்று எப்படி தெரியவரும்? இந்த வரைபடங்கள் அங்கு இருக்காது. இங்கோ பாரதம் எவ்வளவு பெரியதாக உள்ளது. உண்மையில் பாரதத்தின் ஜனத்தொகை எல்லோரையும் விட அதிகமாக இருக்க வேண்டும். பின் வசிப்பதற்கு எவ்வளவு இடம் வேண்டும். சொர்க்கத்திலோ மிகவும் குறைவானோர் இருப்பார்கள். உங்களது புத்தியில் இந்த விஷயங்கள் உள்ளன. விநாசம் ஆகியது என்றால் நாம் மீதிபேர் மிகவும் குறைவானோர் இருப்போம் விருட்சத்தின் அஸ்திவாரம் அல்லவா? அதன் பின் வரும் காலத்தில் விருட்சம் வளர்ச்சி அடைந்து கொண்டே போகும். அத்துடன் நம்பர் பிரகாரம் மற்ற மரங்கள் (தர்மங்கள்) சேர்ந்து கொண்டே இருக்கும். உங்களில் கூட மிகவும் குறைவானவர்களே இந்த விஷயங்களைப் புரிந்து கொள்கிறார்கள் மற்றும் போதையில் இருக்கிறார்கள். நாம் பாபா மூலமாக ஞானம் நிறைந்தவர்கள் ஆகிறோம். பாபாவோ மிகவும் எளிதாகக் கூறுகிறார். இந்த சிருஷ்டிச் சக்கரத்தை மட்டும் கவனத்தில் கொள்ளுங்கள் என்று கூறுகிறார். சிருஷ்டி சக்கரம் மற்றும் சங்கு. யார் ஞான சங்கொலி எழுப்பாதவர்களாக உள்ளார்களோ அவர்களை கீதையைக் கூறும் பிராமணர்கள் என்று எப்படி கூறுவார்கள்? கீதையைக் கூறுபவர்கள் கூட நம்பர் பிரகாரம் இருப்பார்கள். யார் நல்ல பக்குவமடைந்து வித்துவான் களாக இருப்பார்களோ அவர்களுக்கு போதை இருக்கும். எத்தனை ஆயிரக்கணக்கான மனிதர்கள் அமர்ந்து கேட்கிறார்கள். உங்களுடையதோ புதிய விஷயங்கள் ஆகும். இவர்களுடைய ஞானம் ஹிந்துக்களினுடையதும் தெரியவில்லையே என்கிறார்கள். பிறகும் ஒரு சிலரோ போலாநாத் பாபா, பக்தர்களின் இரட்சகர் பகவான் இல்லை முஸ்லீம் களுக்கானதும் இல்லையே எங்கிருந்து கொண்டு வந்தார்கள். பதீதபாவனன் வந்துள்ளார் என்று புரிந்து கொள்கிறார்கள் அல்லவா? அவர் அவசியம் வர வேண்டியே உள்ளது. எனது நினை வார்த்த கோவில் கூட உள்ளது என்று தந்தை கூறுகிறார். நான் வந்திருப்பதே தூய்மையற்றவர் களை தூய்மையாக்க பாபா வந்து நம்மை 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் போலவே விளக்கிக் கொண்டிருக்கிறார் என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிந்துள்ளீர்கள். பாபா, நாங்கள் கூட 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் வந்திருந்தோம் உங்களிடமிருந்து ஆஸ்தி எடுத்திருந்தோம் என்று நீங்கள் கூறுகிறீர்கள். இவ்வளவு ஏராளமான குழந்தைகள் கூறுகிறார் கள், என்றால் இதில் குருட்டு நம்பிக்கையின் எந்த விஷயமுமே இல்லை. எல்லோரும் கூறுகிறார்கள். பாபா நாங்கள் உங்களுடைய பேரன்கள் பிரம்மாவின் குழந்தைகள் என்று. யாரை வேண்டுமானாலும் கேளுங்கள், கூறுவார்கள், ஆம் சிவபாபாவின் குழந்தைகளே எல்லோரும் சகோதர சகோதரர்கள். பிறகு சாகாரத்தில் பிரம்மாவின் குழந்தைகள் ஆன காரணத்தால் சகோதர சகோதரிகள், பிரம்மாகுமார் குமாரி ஆகி விட்டார்கள் .எனவே இது புத்தியில்

இருக்க வேண்டும். நாம் பிரம்மாவின் குழந்தைகள் பிரம்மாகுமார் குமாரிகள் என்பது. இதில் விகாரத்தின் எந்த விஷயமும் கிடையாது. ஒரே குலம் ஆகிவிட்டது. பிரஜாபிதா பிரம்மா படைப்புக் கர்த்தா ஆவார். அவசியம் இவர்கள் பிரஜைகள் ஆவார்கள் அல்லவா? சிவபாபா வந்து பிரம்மா மூலமாக குழந்தைகளாக ஆக்குகிறார். எனவே அவசியம் சத்யுகத்திற்கு முன்னால் வந்திருப்பார்கள் எந்த பிராமணர்கள் பிறகு தேவதை ஆகிறார்களோ அவர்கள் அவசியம் தூய்மையாக இருப்பார்கள். யாரெல்லாம் தூய்மையாகிறார்களோ அவர்கள் தங்களது இராஜ்ய பாக்கியத்தை அடைகிறார்கள். சிவபாபா பிரம்மா மூலமாக இந்தப் படைப்பை படைத்துக் கொண்டிருக்கிறார். நாம் 5 ஆயிரம் வருடத்திற்கு முன்பேயும் சங்கமத்தில் இருந்தோம், இப்பொழுதும் இருக்கிறோம். பின் நாம் தேவதை ஆவோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். சத்யுகத்திலோ அல்லது கலியுகத்திலோ யாரும் பிரம்மாகுமார், குமாரிகள் ஆவதில்லை. சங்கமத்தில் தான் ஆகிறார்கள். பிரம்மாகுமார் குமாரிகள் சகோதர சகோதரி ஆகிறார்கள். இது தூய்மையாக இருப்பதற்கான யுக்தி ஆகும். யார் தூய்மை ஆவதில்லையோ அவர்கள் உலக இராஜ்யம் பெற முடியாது. பிராமணர்கள் தான் தேவதை ஆகுபவர்கள் ஆவார்கள். குழந்தை களே! புருஷார்த்தம் செய்து தாரணை செய்யுங்கள் மற்றும் பிறருக்கும் செய்வியுங்கள் என்று தந்தை புரியவைக்கிறார். தேவதை ஆவதற்கு தகுதி உடையவர்களாக நீங்கள் ஆகி விடும் பொழுது பிறகு விநாசம் ஆகும். விநாசம் முன்னால் நின்றுள்ளது. நல்ல சேவாதாரி குழந்தை களின் புத்தியில் ஞானம் நிலைத்திருக்கும். தானம் செய்வதில்லை என்றால் புத்தியில் நிலைப்பதே இல்லை. அநேக பிரம்மாகுமார்-குமாரிகள் நல்ல முதல் தரமான உழைப்பு செய்கிறார்கள். ஒரு சிலர் இரண்டாம் தரம், ஒரு சிலர் மூன்றாம் தரம் என்றால் அவ்வாறே தான் பலன் கிடைக்கும். எல்லோருமே எங்களுக்கு முதல் தரமான பிரம்மாகுமாரியை அனுப்புங்கள் என்று கூறுகிறார்கள். இப்பொழுது அத்தனை பேரை எங்கிருந்து கூட்டி வருவது? இதுவும் யார் முதல் வகுப்பு என்பதை சிவபாபா அறிந்துள்ளார். ஒவ்வொருவருடைய நிலை யையும் அறிந்துள்ளார். நிறைய பிள்ளைகள் நன்றாக சேவை செய்கிறார்கள்.

பிராமணர்களுக்கு (லௌகீக பிராமணர்கள்) உணவு பற்றிய மிகுந்த ஈடுபாடு இருக்கும். ஆங்காங்கு சுற்றிக் கொண்டே இருப்பார்கள். குழந்தைகளிலும் கூட ஒரு சில குழந்தைகளுக்கு நல்ல உணவு கிடைக்கவில்லை என்றால் நிம்மதியே இருக்காது - அப்பேற்ப்பட்ட குழந்தை களும் இருக்கிறார்கள். பாபா மம்மாவின் பெயரைக் கெடுத்து விடுகிறார்கள், அவர்களுக்குப் புரிய வைத்தால் கூட கோபம் வந்து விடுகிறது. ஒரு சிலர் தர்மராஜரை கூட அலட்சியப் படுத்துபவர்களாக உள்ளார்கள். அவர்கள் பிறகு ஆச்சரியப்படும் வகையில் ஓடிப்போய் விடுகிறார்கள். ஸ்ரீமத்படி நடக்க முடியாதபடி மாயை அப்பேர்ப்பட்ட கெட்ட கதியை செய்வித்து விடுகிறது. பின் விகாரத்திற்காக அபலைகள் மீது எவ்வளவு கொடுமை செய்கிறார்கள். கொடுமை கூட அஹோ சௌபாக்கியம் எனலாம். தந்தையிடமிருந்து ஆஸ்தியோ எடுத்துக் கொண்டு விடுவார்கள் அல்லவா? நிறைய பேர் மீது கொடுமை ஆகிறது. ஏனெனில் விஷம் இன்றி இருக்க முடிவதில்லை. இது துர்கதியின் (மோசமான நிலை) உலகம் ஆகும். இதில் யாருக்குமே சத்கதி (நல்ல நிலை) ஆக முடியாது. மரண உலகம் மற்றும் அமர உலகம் பற்றி யாருக்குமே தெரியாது. அமரலோகமாகிய சத்யுகத்தில் முதல் இடை கடை சுகம் இருக்கும். அமரநாத் பார்வதிக்கு கதை கூறினார் என்று

காண்பிக்கிறார்கள். இப்பொழுது சூட்சமவதனத் திலோ கதை கேட்க வேண்டிய அவசியம் இல்லை. பிறகு இந்த கதைகள் ஆகியவை எங்கிருந்து வந்தவை? அமரகதை கூறினார், பின் சூட்சமவதனத்திலிருந்து எங்கே சென்றார்கள்? எதுவும் தெரியாது. எனவே இந்த விஷயங்களை நல்ல முறையில் விளக்க வேண்டும். கதை கூறுபவர்களோ நிறைய பேர் உள்ளார்கள். முதலில் அவர்கள் கூறும் விஷயங்களைக் கேட்டு அதன் பின் விளக்க வேண்டும் தசராவின் பொழுது பெரிய பெரிய மனிதர்கள் இராவணனைப் பார்க்க செல்கிறார்கள். அறிவுள்ள மனிதர்கள் குரங்குகள் எப்படி இராமருக்கு உதவி செய்யும் என்று யோசிப்பார்கள். எதுவுமே புரிந்து கொள்வதில்லை. இச்சமயத்திலோ ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் சண்டையிட்டு கொண்டிருக் கின்றன. ஒரு கிறிஸ்துவின் குழந்தைகள் தங்களுக்குள் சண்டையிடுகிறார்கள். தந்தை கூறுகிறார், இதுவும் டிராமாவின் செயல் ஆகும். டிராமா பற்றி உங்களுக்குத் தெரிந்துள்ளது; அதனால் தான் நீங்கள் இப்பொழுது புருஷார்த்தம் செய்கிறீர்கள். இப்பொழுது நாடகம் முடிவடைகிறது. பாபாவிட மிருந்து ஆஸ்தி பெற வேண்டும் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். இந்த நாடகம் பற்றிய இரகசியம் வேறு யாருடைய புத்தியிலும் இல்லை. பாபா வந்து எல்லா இரகசியங்களையும் தெளிவாக்கி உள்ளார். கற்பிப்பவர் பதீதபாவனர் அந்த தந்தை ஆவார். அவருக்குத் தான் சமர்ப்பணம். மாயை தாழ்ந்தவராக ஆக்குகிறது உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை தான் வந்து உயர்ந்தவராக ஆக்குகிறார். தந்தை கூறுகிறார், குழந்தைகளே! இப்பொழுது நான் கூறுவதைக் கேளுங்கள், பழைய தேகத்தின் உணர்வை விடுவதற்கான புருஷார்த்தம் செய்து கொண்டே இருங்கள். இப்பொழுதோ உங்களுக்கு கணவர்களுக்கெல்லாம் கணவன் கிடைத்து விட்டுள்ளார். அவர் சொர்க்கத்தின் அரசாட்சியை அளிக்கிறார். அங்கு இருப்பதே சம்பூர்ண நிர்விகாரியாக, இது சம்பூர்ண விகாரி உலகம் ஆகும். உலகம் ஒன்று தான். அவர்களே சம்பூர்ண நிர்விகாரி பிறகு சம்பூர்ண விகாரி ஆகிறார்கள். முதலில் பாரதம் சொர்க்கமாக இருந்தது. இப்பொழுது நரகம் ஆகும். இந்த படங்கள் மிகவும் விலை மதிப்பு வாய்ந்தவை. வெளிநாடுகளில் யாருக்காவது விளக்கி இந்த பொருட்களை அளித்தீர்கள் என்றால் இவையோ மிகவும் நல்லவை என்று சொல்வார்கள். எப்படி சிருஷ்டியின் சக்கரம் சுற்றுகிறது, யார் யாருடைய பரம்பரை நடக்கிறது. எல்லோருடைய படங்களும் இதில் உள்ளன. எந்தவொரு தர்மத்தினருக்கும் விளக்கினீர்கள் என்றால் மகிழ்ச்சி அடைவார்கள். இனி போகப் போக ஒருவர் மற்றவரிடம் கேட்டு கேட்டு எல்லோரும் கேட்பார்கள். இதுவோ மிகவும் நல்ல ஞானம் ஆகும் என்பார்கள். வெளிநாட்டிற்கு யாராவது அறிவுள்ளவர் சென்றார் என்றால் நிறைய சேவை ஆகக்கூடும். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகுகாலம் கழித்து காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு தாய், தந்தையான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின், நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1) கர்மம், அகர்மம் மற்றும் விகர்மம் ஆகியவற்றின் விளைவை புத்தியிலிருத்தி சிரேஷ்ட கர்மம் செய்யவேண்டும். படிப்பை ஒருபொழுதும் விடக்கூடாது.

2) ஞான தானம் செய்வதாலேயே தாரணை ஆகும். எனவே அவசியம் தானம் செய்ய வேண்டும். ஒருபொழுதும் தந்தையின் கட்டளைகளை

அலட்சியப்படுத்தக்கூடாது.

வரதானம் : அனைத்து வீண் சக்கரங்களில் இருந்தும் விடுபட்டு இருந்து, நிர்விக்ன சேவை செய்யக்கூடிய அகண்ட சேவாதாரி ஆகுக.

சேவையோ அனைவருமே செய்கிறார்கள். ஆனால் யார் சேவை செய்தாலும் சதா நிர் விக்னமாக (தடையற்று) இருக்கிறார்களோ, அவர்களுக்கு மிகுந்த மகத்துவம் உள்ளது. சேவை யின் நடுவே எந்த விதமான விக்னமும் வரக்கூடாது. வாயுமண்டலத்தின், சகவாசத்தின், சோம்பலின் எந்த ஒரு விக்னமாவது வருமானால் சேவை துண்டிக்கப் பட்டதாகி விடும். அகண்ட சேவாதாரி ஒரு போதும் எந்த ஒரு விக்னத்திலும் வர மாட்டார்கள். ஒரு சிறிதும், சங்கல்பத்திலும் கூட விக்னம் இருக்கக் கூடாது. அனைத்து வீண் சக்கரங்களில் இருந்தும் விடுபட்டு இருங்கள். அப்போது வெற்றிகரமான, அகண்ட சேவாதாரி எனச் சொல்வார்கள்.

சுலோகன்: யார் உள்ளத்தாலும் புத்தியாலும் நேர்மையாக இருக்கிறார்களோ, அவர்கள் தாம் பாபா மற்றும் பரிவாரத்தின் அன்பிற்குப் பாத்திரமானவர்கள்.